நாள் -09.09.2021

O.S.NO.276/2013

வா.சா. 1 ( கிருஷ்ணன் ) மீண்டும் அழைக்கப்பட்டு 4ம் பிரதிவாதி தரப்பு கு.வி தொடர்ச்சி

மாவட்ட ஆட்சிதலைவரின் நடவடிக்கை நான் பார்வையிடவில்லை. மாவட்ட ஆட்சிதலைவர் அனைத்து வருவாய் துறை ஆவணங்ளகிலும் பேயோடு எனறு தான் அழைக்கவேண்டும் என்று இயற்றிய நடவடிக்கை எதிர்த்து எந்த வழக்கும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மாவட்ட ஆட்சிதலைவர் மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்திருந்தார் என்ற விபரம் தெரியாது. ஆகவே வருவாய் துறையில் பிளாக் எண்7 பேயோடு ஊரினை பொறுத்தவரையில் என்னென்ன உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். ஆகவே வருவாய் துறையில் பிளாக் எண் 7ல் பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவுகளை நீக்கரவு செய்ய நான் இந்த வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஆனால் அரசன் விளை மற்றும் சூரப்பள்ளம் ஊர் குறித்து இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எங்கள் ஊரில் ராமசாமி நாடார் மகன் அன்பையா இருந்தார், அவர் ஒரு வருட காலத்திற்கு முன்பே காலம் சென்று விட்டார். சூரபள்ளத்திற்கு பஞ்சாயத்த உள்ளதா என்றால் மேற்படி ஊருக்கு 3 பஞ்சாயத்து உள்ளது. வெள்ளிசந்தை, கணபதிபுரம், மேலசங்கரன்குழி ஆகியவை மேற்படி 3 பஞ்சாயத்துகளாகும். நான் மேலசங்கரன்குழியின் 7வது வார்டுக்கு உட்பட்ட இடம் என்றால் சரிதான். சூரபள்ளத்திற்கு

தனி பஞ்சாயத்தது கிடையாதுஎ ன்றால் சரிதான். மேலசங்கரன்குழி பஞ்சாத்தில் பிளாக் எண்7ல் வரும் பகுதியை சூரப்பள்ளம் என்று அழைக்கமுடியாது என்றாலும், அதனை பேயோடு என்று தான் அழைக்கவேண்டும்எ ன்றாலும் சரியல்ல. நான் கூறும் சூரப்பள்ளத்தில் தாமசிக்கவில்லை என்றால் சரிதான். சூரப்பள்ளத்தில் இருந்து ஆகவே இவ்வழக்கின் பிரச்சனைக்குரிய பகுதியில் உள்ள நபர்கள் எனக்கு இவ்வழக்கினை தாக்கல் செய்ய அதிகாரம் வழங்கவில்லை என்றால் சரிதான். எனக்கு வழக்கு பகுதி குறித்து வழக்கு தாக்கல் செய்ய அதிகாரம் வழங்கப்படாத காரணத்தினால் எனக்கு இவ்வழக்கு தாக்கல் செய்ய உரிமை கிடையாது என்றால் சரியல்ல. ராமசாமி நாடார் மகன் அன்பையா எங்கள் ஊரில் எத்தனை வருடகாலம் இருந்தார் என்றால் 15 வருட காலம் குடியிருந்தார். மேலும் அவரின் மகன் மகளுக்கு அவர் தனக்கு உரிமைப்பட்ட சொத்துகளை எழுதிவைத்திருந்தார். மேற்படி அன்பையாக குடியிருந்த வீடானது 7வது வார்டு என்றால் சரிதான். மேலும் அவர் 7வது வார்டில் கதவு எண்.112ல் தான் குடியிருந்தார் என்றால் எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் அன்பையாவிற்கு எதிராக நடந்த குற்றவியல் வழக்கு குறித்த ஆவணம் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி அன்பையா அவர் கதவு எண்112டி என்ற கொண்ட வீட்டில் தான் வசித்துவந்தார் என்றும், அவர் அரசன்விளை என்று குறிப்பிட்டால் தான் வீட்டுவரி செலுத்துவேன் என்று இருந்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி அன்பையாவிற்கு எதிராக குற்றவியல் வழக்கு எண் 273/ 1991 என்ற வழக்கில் அன்பையாவிற்கு எதிராக தீர்ப்பு அளிக்கப்பட்டதுஎன்றாலும

அவருக்கு எதிராக 105 ரூ தண்டபணம் செலுத்தவேண்டும் என்று தீர்ப்பு பரப்பட்டது என்றாலும் மேலும் பேயோடு என்று தான் அழைக்கப்படவேண்டும், அரசன் விளை என்று தான் அழைக்கப்பட கூடாது என்று தீர்ப்பு வழங்கப்பட்டதுள ன்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி வழக்கு நடைபெற்ற காலத்தில் நான் சிவகாசியில் பணிபுரிந்தேன். அன்பையாக அவருக்கு எதிராக தண்டம் செலுத்துவதற்கான தண்டனை வழங்கிய ஆணை குறித்து எதிர்த்து மேல்முறையிடு செய்தாரா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. ஆகவே அ.வ.எண்.814/1988 என்ற வழக்கில் நடந்த விபரங்களை நீதிமன்றத்தில் இருந்து சான்றிட்ட நகல் எடுத்து பார்தது அவ்விபரங்களை தெரிந்துகொண்டுதான் இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ஆகவே எனக்கு உயர் நீதிமன்ற ஆணை குறித்தும், நீதிபேராணை அளித்த உத்தரவு குறித்து விபரம் தெரியாது என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் எனற்றால் சரியல்ல. மாவட்ட ஆட்சி தலைவரின் அறிக்கை அடிப்படையிலும், மாண்புமிகு உயர்நீதிமன்றத்தின் உத்தரவின் அடிப்படையில் நில அளவை துறையின் ஆவணம் மற்றும் பஞ்சாயத்தில் பிறப்பிக்கப உத்தரவுகளோ நிலைக்க தக்கதல்ல என்ற விபரத்தினை தெரிந்து தான் மேற்படி விபரம் எனக்கு தெரியாது என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ32, 34, 35 ,மற்றும் 36 ஆகிய செய்திதாளில் வெளியிடப்பட்ட விபரங்கள் உண்மையானது என்பது என்னுடைய அபிப்பிராயம் என்றால் சரிதான். ஆகவே செய்திதாளில் வெளியிடப்பட்ட விபரம் அனைத்தும் வருவாய் துறை ஆவணத்திற்கு மாறாக வெளியிடப்பட்டுள்ளது என்றால்சாயில்ல.

வருவாய் துறையின் ஆவணம் நிலஅளவையின் அடிப்படையில் தான் இருக்கவேண்டும். நான் தாக்கல் செய்துள்ள குடும்ப அட்டைகள் இவ்வழக்கு சொத்தானது அரசன்விளை என்று காட்டுவதற்கான ஆவணம் என்றால் சரிதான். நான் மாவட்ட ஆட்சி தலைவருக்கு எதிராக செயல்படுகிறார் என்று என்னுடைய வாதுரையில் குறிப்பிடடுள்ளேன் என்றால் சரிதான், ஆனால் மாவட்ட ஆட்சிய தலைவருக்கு எந்த அறிவிப்பும் வழங்கவில்லை , ஆனால் மனு தாக்கல் செய்துள்ளோம். மேற்படி மனுவினை 2012ம் ஆண்டில் தாக்கல் செய்தோம். மாவட்ட ஆட்சி தலைவரிடம் தாக்கல் செய்த மனு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டதுஎ ன்று தெரிந்துகொள்ளவில்லை. பிளாக் எண்.7 மேலசங்கரன்குழி பஞ்சாயத்திற்கு உட்பட்ட பகுதியானது பேயோடு என்று தான் அழைக்கவேண்டும் என்றும், அரசன் விளை என்று அழைக்கப்பட முடியாது என்று அரசு ஆவணம், வருவாய் ஆவணம், மாவட்ட ஆட்சிதலைவர் உத்தரவு, உயர்நீதிமன்ற உத்தரவிலும் அவ்வாறு இருப்பதினால் இந்த உரிமையில் நீதிமன்றத்தில் உரிமை கோரமுயாது என்றால் சரியல்ல. வேறு வழக்கு தாக்கல் செய்யப்பட்டு இறுதிநிலை தீர்ப்பு எடுக்கப்பட்டுவிட்டதால் இந்த வழக்கு நிலைக்க தக்கதல்ல என்றால் சரியல்ல. எனக்கு தனிப்பட்ட முறையில் வழக்காடவேண்டும் என்ற காரணத்திற்காக இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டதுஎன்றால் சரியல்ல. ஆகவே இவ்வழக்கானது தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

கு.வி. முடிக்கப்படுகிறது.